உ
சிவமயம்


அன்பே சிவம்

அன்பே குரு



ஸ்ரீ அப்பர் சுவாமிகள்

அருள்மிகு ஸ்ரீ அழகிய கூத்தர்



திருநெல்வேலி மாவட்டம், இராஜவல்லிபுரம்,
செப்பறை தாமிரசபை.

உ
கடவுள் துணை

ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள்
ஸம்ஸ்கிருதத்திற் செய்தருளியதை
தமிழில் மொழிபெயர்த்த

உடலறி விளக்கம்

சுத்தப்பதிப்பு

சென்னை,
மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்கு
பதிப்பிக்கப்பட்டது
1916

வெளியீடு :

திருக்கயிலாய பரம்பரை - சைவ ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்,
குருமுதல்வர்

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருமடம்

சேலம் மெயின் ரோடு, மூலசமுத்திரம் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டை - 606 107.
அலைபேசி : 9486420756

இந்நூலை 94 ஆண்டுகளுக்குப்பின் இரண்டாவது பதிப்பாக நமது திருமடம் இந்நன்னாளில் வெளியிட்டு சிறப்பிக்கின்றது. பின்னர் வரும் (2016-இல்) 100 ஆவது ஆண்டுவிழாவில் இந்நூல் உரையுடன் வெளிவர உள்ளது.

அருளாணையின் வண்ணம்,
சுவாமி சிவபாலானந்த சரஸ்வதி,
காறுபாறு தம்பிரான்.



ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருமடம்,
சேலம் மெயின் ரோடு, மூலசமுத்திரம் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டை - 606 107.
அலைபேசி : 9486420756

நமது திருமடத்தின் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் அவர்கள் திருவுருவப்படம் அமெரிக்காவின் அஞ்சல்துறையினரால் அமெரிக்க வாழ் இந்திய தமிழர்களின் முயற்சியால், 4 வேதங்களிலும் முதன்மைபெற்று அநேக திருப்பணிகள் செய்த கும்பாபிஷேக செம்மல் சுவாமிகளைத் தேர்ந்தெடுத்து அஞ்சல்தலையில் வெளியிட்டுள்ளனர். இந்நூலும், அஞ்சல்தலையும் நம் பாரத நாட்டில் நமது திருமடத்தில் சிறிய விழாவாக 01-01-2011 அன்று நடத்தி வெளியிட்டு, அமெரிக்க வாழ் இந்திய தமிழர்களையும் பாராட்டி மகிழ்கிறோம். அமெரிக்கா வெளியிட்ட அஞ்சல்தலை பின்பக்க அட்டையில் வெளியிட்டுள்ளோம்.

இவ்வண்ணம்,
திருக்கயிலாய பரம்பரை - சைவ ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்,
குருமுதல்வர்

இந்நூல் வெளிவர உதவிபுரிந்த அன்பர்கள் :

திருப்பணி செம்மல்.
திரு. K. **வெங்கட்ராமன்** அவர்கள்
ஸ்ரீ பாக்யலட்சுமி எண்டர்பிரைசஸ்,
விருகம்பாக்கம். சென்னை - 92.

சைவ சமய அறப்பணி செம்மல்.
காசிஸ்ரீ. திரு. R. **குமரவேல்** அவர்கள்,
SDR காண்ட்ராக்டர், போரூர், சென்னை-116.

சைவ சமய அறப்பணி செம்மல்.
திரு. R.S. **நடராஜன்** அவர்கள், ஆம்பூர்
வேலூர் மாவட்ட அமைப்பாளர், மனித உரிமைகள் கழகம்.

திரு. S. **பவானி சந்திரசேகரன்** அவர்கள்,
குடும்பத்தினர், ஸ்ரீரெங்கம், திருச்சி-6.

திரு. K. **சிவவிக்னேஷ்**, K. **சதீஷ்** அவர்கள்,
சரவணா மெடிக்கல்ஸ், திருவெண்ணெய்நல்லூர்.

உடலறி விளக்கம்

காப்பு

விட மருந்தியமிர்தமுண்ட விமலநாதன்
விரிசடையன் மதிசூடிமமுமானேந்தி
இடமருவும் பரைபுதல்வனறுமுகன்ற
னிளவலரிமருகனீராறு தோளன்
குடவயிறன்றனக்கிளைய குமரன் கந்தன்
குகனைமறவாமல் நெஞ்சகமே பூண்டு
உடலறியும் விளக்க மெனவுரைத்தேன்பாவுக்
குதவியருள்புரியுமயன்றேவிகாப்பாம்.

திக்குமனுபுகமுமறை சாத்திரங்கள்
சிறந்த சிதம்பரமேவு ஞானதேசி
பக்கமிருபுற முமாணாக்கர் சூழப்
பன்னிரண்டு சமயத்துப் பல்லோர் வந்து
தர்க்கமிடுங்கனக சபையருளுடையான்
சங்கராசாரியிருதாள் பணிந்து
மிக்க குருபரனேயைம் பூதமென்று
விளம்புவதையடியேற்கு விதிக்க வென்றான்.

முந்தவுரைப்பது சரியை கிரியையோக
மூன்றினுக்கு மெட்டாதஞானபாதம்
வந்தவகைதனைவிளக்குந்தத்துவங்கள்
மாநிலத்திலுரைப்பதுவும் தொண்ணூற்றாறாம்
அந்தவகை தன்னிலைம் பூதமென்று
மண்ட பிண்டம்படைத்துநிற்குமதனைக் கேட்பாய்
உந்தனுக்குத் தெரியும்வகை விபரத்தோடு
முரைத்திடுவேனென்று மகிழ்ந்துரைக்கலுற்றார். 2

பூதாதியெனும் பெயரஞ்சுண்டே தென்னில்
பிரிதீவப்புடன் தேயுவாய்வாகாயம்
ஆதாரமான மண்ணீர் நெருப்போ
டசைவானவாயு வொளியதன் பேரைந்தாம்
சூதான ஞானவிந்திரியமைந்து
துய்யதொக்கு சட்சுசிங்நுவையாக்கிராணந்
தீதானதோத்திரமிதன்விரிவு கேளாய்
சிறந்த செவியுடம்பு வாய்கண்மூக்காமே. 3

உன்னவரிதானதன் மாத்திரையைக்கேட்பா
யுரைப்பர் சத்தபரிசமுடன் ரூபரசகந்தம்
என்னுமிவை தமிற்சத்தம் செவியிற் கேட்கு
மியற்பரிசமுடம்பு சுகமறியும்ரூபம்
கண்ணு முருக்காணும்ரச மினிப்பைக்காட்டுங்
கருதுகந்தம் நாசியினிற் கந்தங்காணும்
சொன்னவகையைந்து முயிர்க்கூறாமென்று
சொல்லுகன்மேந்திரியந்தானைந்து முண்டே. 4

உண்டுவிரித்திடும் வாக்குப்பாதம் பாணி
யொப்பரியபாயுருவென்று பத்தமஞ்சாம்
கண்டுகொள்ளும் வாக்குவாய் திறத்தல்பாதங்
காணுமிருகால்பாணிகையதாகும்
விண்டுமுறைபாயுருக்கண்ணாணியாகும்
விரித்தபடியுபத்த மென்பது வேலிங்கம்
என்றுமறிகரணமினிநான்குகேளா
யியம்புமனம் புத்தியாங்காரஞ்சித்தம். 5

மனமான செயல் நினைக்கும் புத்தி விசாரிக்கு
மகங்காரங் கொண்டெழுப்புஞ்சித்தமொன்றிவிக்கும்
இனமானதத்துவமூவெட்டுக்கும் பேர்
மேதினியிலாத்துமதத்துவமுமென்பர்
கனமானபோக்கிய காண்ட மென்றுங்
கருதியிடுவித்தியாத்துவங்கேள்
தினமாய் கையோடமுந்தும் வித்தைகாலஞ்
செய்நியதிகலை ராகம்புருடன்மாயை. 6

வித்தையுமென்பது வறிவுண்டாக்குவிக்கு
மெழிலானகால முக்காலமறிவிக்கும்
நித்தியகன்மாதிகளை நியதிநீக்கும்
நேரானகலையாணவத்தை நீக்கும்
மற்றுமினிராகமிச்சை தனையுண்டாக்கி
மயக்குவிக்கும்புருடன் விடயத்தமுத்தும்
மெத்த விசாரங்களிடுமாய்கையென்று
விளம்புசுத்தகாண்டமென்று விதித்தவாறே. 7

காக்கரியசித்த மெனுமீசுரந்தான்
கருது சதாக்கியஞ்சத்திசிவமைந்தாகும்
ஏற்குமிதுதனிற் சுத்தமறிவுண்டாக்கி
யெழுப்பிவிடுங்கிரியை குறைந்திருக்குமென்றே
நோக்கரியவீசுர முங்கிரியையுண்டாக்கும்
நுவலு சதாக்கிய ஞானகிரியையுமொத்திருக்கும்
தீர்க்கரிய சத்தியெனுந்தத்துவங்கேள்
கிரியைசிவதத்துவமெய்ஞ்ஞானமாமே. 8

சித்திதரு தத்துவமீரைந்து தன்னைச்
சிவதத்துவம் சுத்ததத்து வங்களென்றும்
உற்றுரையுமுட்கருவி முப்பத்தாறு
முரைத்தவகை விபரமறிந்துணர்ந்தபோது
மற்றுமினிப்புறக்கருவியிருபத்தைந்தும்
வகைவிபரத்தோடு முனக்கருளிச்செய்வோம்
பத்தியுடனுகந்து மனக்கவலை நீக்கிப்
பிரிவுடனேகேளுமெனப்பகரலுற்றார். 9

பிறக்கருவியென்றுரைத்த பெருமைகேள்நீ
பிரிதீவின் கூறுமயிர்தோலெலும்பு
மறைக்கவருமிறைச்சியுடனரம்பைந்தாகு
மப்புவியின் கூறுமச்சை சுக்கிலந்தான்
சிறக்கவருமூளைநடு நீரோடைந்து
தேயுவின் கூறாகாரம் பயஞ்சோம்பென்னுங்
குறைக்கவருநித்திரைமைதுனங்களைந்துங்
கூறினோம் புறக்கருவியின்னாங்கேளே. 10

வாயுவெனுங் கூறுகிடத்திடுதலோடல்
மகிழ்ந்திருத்தல் நடத்தலுடனிறுத்தலைந்தாம்
காயுகதிர்மேவுமாகாயக்கூறு
காமமெனுங்குரோதமதலோபமோகம்
நீயுமறிபுறக்கருவியிருபத்தைந்தும்
நிகழ்த்தினோமினியுனக்குத்தெரியநன்றாய்
தேயுவெனுமக்கினியுண்டாக்கிவந்த
தசவாய்வு நின்றநிலை செப்புவோமே. 11

பிலத்துநிற்கும் பிராணனுடன பானன்வியானன்
பிரியாதவுதானனுடன் மானன்கூர்மன்
நறத்துநின்ற நாகனெழிற்கிரிதரனுமாகும்
நல்லகுண தேவதத்தன்றனஞ்சயன்பத்தாகும்
இலக்கமுடன் பிராணநிலை மூலமதிற்றோன்றி
யெழுந்துசிரசளவு முட்டியிருவழியின் கீழாய்க்
கலக்கமற நாசிவழியோடு மீராறிற்கடுகி
யெட்டுமுட்புகுதக்கழியுமொருநான்கே. 12

உந்தியெனுந்தலத்தின் கீழபானனின்று
உறுமிமலசலங்களையுங் கழித்துநிற்கும்
இந்த வெழில் வியானன்றோள் தன்னில் நின்று
மிகக்களையுந்தவனமுமுண்டாக்குவிப்பன்
பிந்தவுதானன் செயலுண்டசனந்தன்னைப்
பெருநாடி நரம்பு வழியூட்டுவித்து
இந்தவுடல்தனை வளர்க்குஞ்சமானன்றானு
மெவரையுமிஞ்சேற வொட்டாதிருப்பனன்றே. 13

கூர்மனிருவிழியிலிமைத்திடுவனாகன்
கொட்டாவிவிக்கலெனுங் கொடுமை செய்வன்
தீரகிரிதரனீட்டி முடக்குவிப்பன்
றேவதத்தன் விழிப்பளவில் வசனஞ்செய்வன்
போர்மனெனுந் தனஞ்சயன் மேற்சிரசு ரெண்டாய்ப்
பிளந்திடும் போதவனோடிப் போவானென்றே
நேர்மையறிந்திடுவையினிநாடி பத்தும்
நிலைமை தெரிந்திட விபரமுறை செய்வோமே. 14

சுழுமுனையாமிடை கலைபின்கலை காந்தாரி
துய்ய வத்திசிங்நுவையோடலம்புடையம்புருடன்
எழில் குகுவன் சங்கினியோ டீரஞ்சாகும்
இதகுதச நாடிபத்து நிலைமைநாமும்
மொழிவதுகேள் சுழுமுனையென்பது மூலத்தில்
முளைத்து நடுவெழுந்து சிரசளவுநிற்கும்
பொழியறிவைச்சுழு முனையில் கலைகள் தோன்றிப்
பிறக்குமிருநாசியளவாகிநிற்கும். 15

கண்டமதில் நின்று காந்தாரிநாவிற்
கரத்துநீர்பொசியவுபாயங்கள் செய்வன்
அண்ட செவிதனிலத்தி சிங்நுவைநின்
றவத்தையொரு நான்கினுக்கு மூமூவென்பன்
விண்டவலம்புருடனிருவிழியில் நின்று
மெய்மறந்தபோது மசைவாகிநிற்பன்
கொண்ட குருநாபியில் நின்றீரல் பற்றிக்
குடல் புரட்டிவாய்நீர் சுழன்றோட்டுவிப்பன். 16

சங்குனியென்பவனாபி குய்யம்பற்றித்
தாரருப்பனொரு வரையுமிஞ்சொட்டாமல்
அங்குமதிகாரியனோடெண்பத்தொன்று
மறிவித்தோம் வசனாதியைந்துங்கேளாய்
இங்குவசனாங்கமனந்தானத்தோடு
மிருந்தவெழில் விசற்கமானந்தமைந்தும்
பொங்குவசனாதியவன் வாக்கில் நின்று
பொருந்தவசனித்திடுவன் பிறப்பில்லானே. 17

பாதமெனுங்கமன நடத்திடுவன்தானம்
பிரிந்துகொடுத்திடுவனிருகையினாலும்
போதவழித்திடுவிகற்பமபானத்தின் கீழ்ப்
பொருந்தவவரவர்க்கு வழிகாட்டி நிற்பன்
சேதமறச்செய்வனானந்தலிங்கன்
சேர்ந்து பயிரிடுவனதி மோகத் தோடும்
பேதமறக்கண்டு மாணாக்கனேயுன்
பெருங்கவலை தீர வாக்காதிகேளே. 18

வாக்காதியென்ப தொரு நான்குண்டென்பார்
வகுப்பதுகேள் சூக்குமை சூட்சாதி பேசும்
நீக்காய்பைசந்திகொஞ்சவார்த்தை பேசும்
நெறியானமத்திமை மெத்தெனவும் பேசும்
நோக்கால் வைகரிவினை சௌரியங்கள்
நொடிக்குமிவைதனையறியுங்குணமூன்றுண்டு
போக்கான ராசதனாங்காரனாகிப்
பொருந்தியிடுமமிர் தகுணமுடையன்றானே. 19

தாமகனென்பவன் மவுனமத்திமையாய்த்
    தானிருப்பன் வெல்லரிதுசாத்துவீதன்
தூமகன்றவமிர்தகுண முத்தமனாய்ச்
    சொல்லுமாங்கார மூன்றாவதேது
காமவிழித்தை சதவாங்காரமென்றுங்
    கணக்கறியாதே முரண்டியாங்காரிப்பன்
வீமமறவைகரியெல்லாமடக்கி
    யிடறுகண்டு முரண்டியாங்காரமாமே. 20

பொருந்திநின்ற பூதாதியாங்காரந்தான்
    பொங்கி விசாரித்து மாங்காரங்கொள்வன்
திருந்த நம்மைப்பணிந்த மாணாக்கனேகேள்
    செப்பு மென்றதத்துவங்கள் தொண்ணூற்றாறு
அருந்தமிழாலுரைத்தபடி கண்டு கொள்ளு
    அன்புமையாயிந்த வகைதத்துவங்கள்
இருந்து வந்த வெழுத்தஞ்சுதானுமுண்டு
    இனமறியாமாந்தரொடு மிணங்கொணாதே. 21

இணங்கவொணா தென்றமொழி கேட்டெழுந்து
    விருகரமுங் கூப்பியடிபணிந்து முக்கால்
வணாங்கி மனமகிழ்ந்துவாய்புதைத்து நின்று
    மனக்கவலை தீர்கவந்த ஞானதேசி
குணாங்களொரு மூன்றுடையதத்துவங்கள்
    கூறியதெல்லா மஞ்சிற்பிறந்ததேது
பிணாங்கவறியாத குருபரனேயைந்தின்
    பெருமைதெரிந்திடவுரையுமெனப்பணிந்தான். 22

ஓங்கார முதலூமைதனிற்பிறக்கும்
ஒவ்வெழுத்திலீரெழுத்து முதித்து நிற்கும்
பாங்கான உவ்வெழுத்தில் அவ்வுந்தோன்றும்
பகர்ந்த அவ்வில்யவ்வெழுத்துமவ்வுந்தோன்றும்
நீங்காதசிவ்வெழுத்தில் மவ்வுந்தோன்றும்
நின்ற மவ்வில் நவ்வெழுத்து நேராய்த்தோன்றும்
தீங்கானதத்துவங்கள் தொண்ணூற்றாறும்
சிவாயநம வஞ்செழுத்தில் ஜனித்தவாறே. 23

ஜனித்தவகை விபரமுரைத்திட்டநாதா
ஜகம்புகழுமெஞ்ஞான தேசிகாநீ
மனிதவடிவாகியெனையாளவந்த
வல்லவனேத்துவங்கள் தொண்ணூற்றாறு
மினித்திருந்தமாக வஞ்சிற் பிரித்தடைத்து
வெழுத்தொன்றுக்கிவ் வளவென்றெனக்குத்தோன்ற
தொனித்திடு மென்றிருகரமுங்குவித்துவீழ்ந்தான்
துய்யகுருபரனும் மங்கேது சொல்வார். 24

புகலரியநவ்வெழுத்துப்பிரிதிவாகும்
புதல்வனேயதிற்பிறந்ததத்துவங்கள்
அகலநிலமனம் வாக்குப் பாதம்பாணி
யடுத்தவெழில் பாயுரு வென்று பத்தமேழாம்
இகலுடைய மயிரெலும்பு தோல் நரம்போ
டிறைச்சிசட்சு சிங்நுவையாக்கிராணந்தொக்கு
சகலவெழில் தோத்திரம் பைசந்திராசதன்
தைசதவாங்காரமிவையிருபதாமே. 25

போதமெனுமவ்வெழுத்துவப்பதாகும்
புத்திசுழுமுனையுமிருகலைகாந்தாரி
சாதமெனு மத்திசிங்நுவைய லம்புருடன்
சங்கினியென்றாகு மச்சை நீருதிரம்
சூதமெனு மூளை சுக்கிலந்தாமதஞ்
சூக்குமைவை காரியோடி வையிருபதாகும்
நீதமெனுஞ்சிவ்வெழுத்து தேய்வாங்காரம்
நீயுமறிபூதாதியாங்காரமென்றே. 26

வைகரியென்பது சோம்புபயமாகாரம்
மைதுனம் நித்திரை சுத்தமீசுரந்தான்
மெய்கருது சத்திசிவஞ்சதாக்கியம்
விரும்புகின்ற சாத்து விதமிவை மூவைந்தாம்
பையவறிவவ்வெழுத்து வாய்வுசத்தம்
பரிசமுடன் ரூபரசகந்தமாகும்
துய்ய வசனாங்க மனந்தானத்தோடு
சொல்லிவிசற்கமானந்த மத்திமையுமாமே. 27

ஓடுமுயிர்பிராணனுடனபானன் வியான
னுற்றகிரிதரனாகன் சமானன்கூர்மன்
நீடுதனஞ்செயனுதவுதேவதத்த
னின்றவுதானன் கிடத்தல் நிறுத்தலோடல்
நாடுபுவிதனிலிருத்தல் நடத்தலோடு
நவிலுமிருபத்தேழுதத்துவாங்கள்
தேடுமினிய காரமாகாசந்தன்னில்
சிறந்தவித்தை நியதிகலை ராகமெனும்புருடன். 28

காலமெனுமாயை சித்தம்லோபமோகங்
காமமெனுங்குரோத மதம் பதினாலாமே
பாலகனே நாமுரைத்தசிவாய மஞ்சில்
பகுத்தவிடமிப்படி நீபார்த்துக் கொள்வாய்
ஞாலமதிலெட்டெழுத்துத் தெய்வப்பேரை
நயந்தறியாப் பேதையறிவில்லாரோடு
சாலவுறன்றியிருவென்றுஞான
சற்குருவுமுரைக்க மாணாக்கன் சொல்வான். 29

தத்துவங்களஞ்செழுத்தில் பிறந்தவாறும்
தனித்தனியே பிரித்தெனக்குத்தெரிய நன்றாய்
உத்துரைத்தபடி தெளிந்து விபரத்தோடும்
ஓரெழுத்துக்கிவ்வள வென்றறிந்து கொண்டேன்
சித்தமகிழ்ந்தெட்டெழுத்துத் தெய்வப் பேரைச்
சிறக்கவுரைத்திடத் தயவு செய்வாயென்று
மெய்த்தவனும் வருந்தியிருகரங்குவித்து
மெல்லடியில் வீழ்ந்துவாய்புதைத்து நின்றான். 30

நவ்வெழுத்துத் தெய்வ மாணாக்கனேகேள்
நான்முகனுமாகுமவ்வெழுத்துமாலாம்
சிவ்வெழுத்து ருத்திரனுமாகுமென்றே
செப்புமயேசுரனும் வவ்வெழுத்தேயாகும்
யவ்வெழுத்துச் சதாசிவனிமாகுமென்றே
யறைந்திடு உவ்வெழுத்துவிந்துநாதம் அவ்வாம்
ஒவ்வெழுத்துமகாமேருவுமையெழுத்தானை
யொருநான்கு வேதவமறியாதபரமாமே. 31

போதமகிழ்ந்தெழுந்துகரங்குவித்துள்ளன்பாய்ப்
பொற்பதத்தில் விழுந்துவாய்புதைத்து நின்று
வேதமறியாத பரமகமேருவெங்கே
விந்துநாதஞ்சதாசிவனுமெங்கே
சூதமயேசுர தேவருத்திரனுமெங்கே
துலங்குதிருமாயைனுந்தானு மெங்கே
மாதவனே யென்பிறவி தீர்க்கவந்த
வல்லவனே சொல்லுக வென்றடிபணிந்தான். 32

நின்ற வழிபாடு மவனிலையுங்கண்டு
நேசமுடன் மகிழ்ந்து குருவேது சொல்வார்
ஒன்று குறையாமல் நீகேட்டதெல்லா
முன்னிடத்திலிருக்குது நீயறிந்தாயில்லை
இன்று தெரிந்திட வவற்றைக்கோணம்வீடு
விதமுளதுசத்திமுதல் காட்டுவிப்போம்
நன்றுபெறக்கேளுமாணாக்காவென்று
நற்குருவுமனமகிழ்ந்தங்கேது சொல்வார். 33

அருந்தவஞ்செய்தவத்தரறியாதவட்ட
மதற்குமிதழ் நானுநடு வெழுந்தகம்பம்
திருந்தவுந்தன் சிரசூமுட்டி நிற்குமத்தைச்
சிறந்த மகமேரு வெனக் காண்பாய் வீடு
பொருந்தவறிந்திடுவையடி மூலாதாரம்
புகழுகணபதி வல்லபையை நோக்கி
இருந்த வர்க்கு மிக வாழ்வுவித்தை புத்தி
யின் பசுகந்தரு தெய்வப்பதியிதாமே. 34

சொன்ன தெய்வப்பதிக்கு மேல்நாலுகோணஞ்
சுத்தியிதழாறு மனை சுவாதிட்டானம்
என்னவழங்கிடுந்துரியாதீத வீட்டில்
இலங்குசரஸ்வதிபிரமாவைப் போற்றி
பன்னுமலரை ருச்சனை செய்திருப்பவற்குப்
படியில் மனுத்தொழுமூன்று கம்பத்தோடு
மன்னர் கொலுவாகியுழுதுண்டு வாழ்க
வரங்கொடுக்குந்தெய்வப்பதியிதாமே. 35

அயன் பதிக்குமேற்பிறையின் கோணங்கண்டீ
ரதனிதழீரஞ்சுமணிபூரகந்தான்
சுயந்துரிய வீடு பெறுலட்சுமிக்குச்
சொந்த நெடுமாலடியில் வீழ்ந்துபோற்றப்
பயங்கிலேசமகன்று ஐய வீரமுண்டாயப்
பஞ்ச கல்யாண சம்பன்னராகி
உயர்ந்த குடியாகிமிக வாழ்வரைய
னுதவியருள்புரிவர் தெய்வப்பதியிதாமே. 36

பதிக்குமே லெழுந்த முக்கோணந்தன்னிற்
பரந்த விதழீராறு சுழுத்திவீடு
உதிக்குமனாகதம் பெறுவனுருத்திரந்தா
னுகந்த சத்திருத்திரியாள் பாதம் போற்றி
துதிக்குமஷ்டதிக்கு மனுப்புகழ்ந்து வாழ்த்த
சுத்தரணசூரதுரைத்தனாங்க ளுண்டாம்
கதிக்கமிக வாழ்வு பெறுமக்கள் சூழ
கனபவுஷூதருந்தெய்வப்பதியிதாமே. 37

காட்டியவப்பதிக்கு மேலாறுகோணங்
    கருதுமிதழ் பதினாறு விசுத்திவீடு
சூட்டிய சொற்பனத்தில் மயேசுரனிருந்தான்
    துய்யமயேஸ்பரியிருவர்பாதம் போற்றி
பாட்டியல்புற்றுரைக்க வருமன்னர் பக்கல்
    பாரதுரைதனம் பெறுவர் பாரின்மீதே
நீட்டிய நற்சிவிகை கரிபுரவிசூழ்ந்து
    நேசமுடன் வாழ்வர் தெய்வப்பதியிதாமே. 38

பகரரியமகே சுரத்துக்கப்பால் வட்டம்
    பாருமிதழ் மூன்று சாக்கிரமே வீடு
நிகரொரு வரற்ற சதாசிவனுமங்கே
    நின்றிலங்கு மனோன்மணியோடாக்கினைக்குள்
சகலரும் வந்தடி பணியக் கொலுவிருப்பன்
    சந்நிதியிலிருந்து தவஞ்செய்வாயாகில்
ஜகமுழுது மாளவரங் கொடுக்குந்தெய்வ
    சிகாமணியைத் தொழுதிறைஞ்சித்தரிசிப்பாயே. 39

தொழும்பெரிய தெய்வபதிக் கப்பால் நாதந்
    துலங்குமீராறு விரலங்குலத்தில்
எழுமிரவிமண்டலத்துக்கப்பால் விந்து
    வீரிரண்டாங்குலத்தி லியங்கி நிற்கும்
முழுமதியமிவர்களிருவரையுங் காணில்
    மூவுலகுமாளுவையுன்னுடம் பறிந்தால்
பழுதுபடாப்பரமறிந்து பிறப்பறுப்பாய்
    பரத்தினிலையொருவராற் பகரொணாதே. 40

குருவுரையைக் கேட்டு மனமகிழ்ச்சியோடு
கொப்பெனவுற் றெழுந்துகரங் குவித்துநின்று
தெரியவிரு மூன்றிலஞ் சவத்தைகாட்டிச்
சிறந்தவித மைம்பத்தோரக்ஷரமுங்காட்டி
மருவுதெய்வமாறுவிந்துநாதங்காட்டி
வல்லசத்தியறுவரையுங் காட்டினாற்போல்
ஒருவரறியாத பரநிலையுங்காட்டி
யுடம்பறியக்காட்டுமெனப் பணிந்து நின்றான். 41

பஞ்சவன்னதத்துவமஞ்செழுத்தினாலும்
பகுத்தநெற்றிவாய் வயிறு கால்கையாகும்
மிஞ்சிவிரல்துடை கணுக்கால் முழங்காலென்னும்
விழிசெவிமேலுச்சி தலைகதுப்பு நாசி
நெஞ்சமெனும் பேர் கடனித்தனியேயான
நிலையில்லாக் காயமிதை நீநம்பாதே
தஞ்சமெனுநாதமுன் னுடம்புகண்டாய்
தனையறியாமாந்தர்களுமுடம்பையறியாரே. 42

நகம்புறங்கால் விரல் கழுத்துக் குதிமார்பென்னும்
நடுமுதுகுபிளவயிறு நாபிதோளாஞ்
சகம்பிறக்கும் நாவுதடு புருவமூக்கு
சிறந்தவுள்ளங்கால் கழுத்துப்பிடரியான
உகமையில்லாப் புறங்கையுள்ளங்கையுமான
உறமுறையுஞ்சதமல்ல நீ நம்பாதே
தகைமை பெறுநாதமுன் னுடம்புகண்டாய்
தனையறியாமாந்தர்களுடம்பையறியாரே. 43

பெருவிரன்மேலுச்சியிவை யெண்சாணீளம்
பிரமாணமங்குலமுந்தொண்ணூற்றாறு
ஒருவிரலங்குலத்துக்கோர் கருவியாகி
யுற்றகருவிக்குலங்கள் தொண்ணூற்றாறு
மருவியவிம் மலம்பொதிந்த நாதவீடு
மண்ணிலெழுநீர்குமிழி நீ நம்பாதே
கருவியுயிர் நாத முன்னுடம்புகண்டாய்
தனையறியாமாந்தர்களுடம் பையறியாரே. 44

வாக்கிலிருந்தறு சுவையைப் பகர்ந்து நாசி
மணமறிந்து செவியிலுரை கேட்டு நின்று
நோக்கியிருந்துருவறிந்துன் னுடம்புகுள்ளே
நொந்தவிடங்காட்டியனலெழுப்பியுண்ணக்
கேட்டுமனுபவித்தலு வல்பார்க்கும் நெஞ்சில்
கிடந்துநினை வெழுப்பிவிளையாடி நித்தம்
தாக்குவிந்து நாத முன்னுடம்புகண்டாய்
தனையறியாமாந்தர்களுடம்பையறியாரே. 45

தூலவுடம்பிது வழியுமழியா நின்ற
சூட்சவுடம் பொருக்காலு மழியாதென்றே
ஞானமதில் வேதமுரைத்திடுமே தென்னில்
நாதமீராறிலெண்கலைபிரிந்து
கோலமுடி மூலமுதளாடிநிற்குங்
குறிப்பறிந்து கொள்வையுன்னுடம்பதுவாஞ்
சாலவொரு நான்குமுட்புறம்பதாகத்
தனித்துமறிந்திடும விடம்பரமதாமே. 46

பொன்னுலகில் மனுப்படைக்க நினைத்தவிடமவிடம்.
புரந்தரன்மாலுருத்திரனுமயனுந்தேட
மின்னுமுகிலிரவிமதி யிமையோர்தேட
விண்ணுலகிற்றேவர்முனிவோர்கள் தேட
பன்னுமறை நான்கு சாத்திரமோராறு
பன்னிரண்டு சமயத்துப் பல்லோர் தேட
இன்னமொருவருமவிடங் கண்டதல்ல
வெம்பிரானிருந்தவிடம் யானுமறியேனே. 47

பெண்ணுமல்ல ஆணுமல்ல அலியுமல்ல
பெரியதல்ல சிறியதல்ல புறம்புமல்ல
மண்ணுமல்ல நீருமல்ல அங்கியல்ல
மதியுமல்ல வெளியுமல்ல வாய்வுமல்ல
எண்ணுமல்ல எழுத்துமல்ல இரவியல்ல
விருளுமல்ல பகலுமல்ல ஏதுமல்ல
நன்றுமல்ல தீதுமல்ல வெங்குந்தானாய்
நடுவெழுந்த பரத்தினிலை நானுமறியேனே. 48

பொன்னல்ல பளிங்கல்ல சிவப்புமல்ல
பொறியல்ல கரியல்ல வேனமல்ல
மின்னல்ல கீழல்ல மேலுமல்ல
விருப்புமல்ல வெறுப்புமல்ல வேதவமல்ல
உன்னல்லவருவல்லவுருவுமல்ல
ஒளியல்ல கருவல்ல வொப்பிலானை
என்னென்று கண்டு நிலை சொல் வேனப்பா
வென்மனதுக்கிசைந்தவுண்மையியம்புவேனே. 49

விலங்குமரம் பறவை சுரர் நீருக்குள்ளாய்
விளைவனவுமூர்வனவுமனிதரோடும்
குலங்களெழுவகை தோற்றத்துள்ளிருந்து
குலாவுமுடற்கீராறி லொருநான்காகி
இலங்கு மண்டபிண்டநிறைந்தெங்குந்தானா
யிரவுபகலற்ற விடத்தாடிநிற்கும்
தலங்கடறிந்திடுமவிடமறியாரெல்லாந்
தம்பிரான் பெருமையறிந் துரைசெய்யாரே. 50

பொங்குகடல் சூழுலகு பதினாலுக்கும்
புவனமரு நூற்றோடிருபத்து நாலும்
எங்குநிறைந்தெவ்வுயிர்க்கு முயிரதாக
விந்துணுவுக்கணுவான வெம்பிரானை
காங்குல் பகலற்றவிடத் திடைவிடாமற்
கதிர்முனையிலாடி நிற்குங்கருத்தினானை
இங்கு நினைந்திருப்பை யெழுமிரவி நீக்கி
யிருக்கலாமென்று குருபரனுஞ்சொன்னார். 51

பல்லர்தொழுகின்ற சிவஞானதேசி
பகர்ந்தவுரை கேட்டடியில் வீழ்ந்தெழுந்து
புல்லடியேன்றூலவுடம் பென்றிருந்த
பொய்யுடம்புக்குள்ளுமோருடம் புகாட்டி
வல்பரம் நின்றநிலை வழியுங்காட்டி
மண்ணில் வரும் பிறவியறுத்திருந்து வாழ்க
வெல்லவுபாயங்கள் சொன்னவிமலநாதா
மெய்க்குருவே போற்றியென மெல்லடியில் வீழ்ந்தான்.

அடியில் வீழ்ந்தெழுந்து கரங்குவித்து நின்று
வருட்குருவை நோக்கியொரு வசனஞ்சொல்வான்
படியிலடியேன் சரிதை கிரியையோகம்
பருவமறிந்திலனறியப்பகருமென்றான்
நெடியமனதுடைய மாணாக்கன் கேட்ட
நெறிபலவாமூன்று முரைத்திடுவோமென்று
முடியில் மதிபுனைந்தகுரு நாதன்றானு
முகமலர்ந்து கேளுமென மொழியலுற்றான். 53

தலங்கள் சுத்தித்திரிதல் நதிமூழ்கல் புட்பந்
தனையெடுத்துச்சாத்தல் தொடுத்திடுதல் கோயில்
துலங்கமுடித்திடுதல் விளக்கிடுதல் கூட்டல்
சுத்திமெழுகிடுதல் பெரியோரைக்காணில்
வலங்கொடுவீழ்ந்தெழுந்து கரங்குவிதல் நோன்பு
வருந்தியிருந்திடுதல் குளங்குழிவு செய்தல்
நலங்கள் பெறுஞ்சரிதை வழிநடத்திட்டோர்க்கு
நல்லறிவு வாழ்வு மிகப் பெறுவர்தாமே. 54

நறுமலர் நீரிளநீர் பழந்தேன் பாலோடு
நல்லகந்த வர்க்க முதற்றூபதீபம்
பெறுஞ்சிவனைக்கணபதியைப் பூசை செய்தல்
புண்ணியபாவங்கள் தெரிந்தோதல் நூல்கள்
சிறிது படித்துயிர்கள் வதையாமல் நித்தஞ்
செய்தொழிலும் கிரிகை வழுவாமல் நின்றோர்
உறுதிபெறும் பலனறிவுமீத லோடு
முயர்ந்தகுடி யாகிமிக வாழ்வர்தாமே. 55

நாடியுமீரைந்து தசவாய்வுபத்து
ஞானவிந்திரியமைந்து கரணநான்கு
கூடியதன் மாத்திரை யஞ்சஞ்சுபூதங்
கூறுதன்மேந்திரியமைந்து ங்குணங்கள் மூன்றும்
தேடியவர்க்கொருநான்கு மூன்றாங்காரஞ்
சிறந்தவித்தையே முசிவதத்துவமுமைந்து
சூடியநற்புறக்கருவியிருபத்தஞ்சு
சொல்லு வசனாதியைந்தின்றொகையைப்பாரே. 56

உள்ளகருவிக்குணங்கள் தொண்ணூற்றாறு
முற்றவத்தையஞ்சு மாதாரமாறு
மெள்ளவறிந்தைம்பத்தோரக்ஷரமும்
விளங்கு சதா சிவனையறிந்துட் புகுந்து
கள்ளமனக்கவலை யொழித்திருகலையைக்
கருதிவரவழைத்து மொருவழியிலேற்றிக்
கொள்ளவல்ல பேரு மெமுவாசற்பூட்டிக்
கொண்டு மசைவற்றசிவயோகஞ்செய்வார். 57

புனைற்றுப் பொறியற்றுப்பூசையற்றுப்
புண்ணியபாவங்கள் வினைதானுமற்று
மலமற்று சலமற்றுமாய் கையற்று
மனநினைவுமற்ற சிவயோகத்தார்க்குப்
பலனுற்றவாறு சொல்லக்கேள் மாணாக்கா
பாரிடமுனியாகி நெடுநாளிருந்து
பிலனுற்ற பூமியில் வந்தவதாரிப்பார்
பிறந்தாலுஞ்சிவ யோகியாவார்தாமே. 58

பாரில்மனுப் பெறுஞ்சரிதைகிரியை யோகம்
பருவமுமெப்படி யென்று நாயடியேன் கேட்க
நீருமுரைத்திடவறிந்து கொண்டேனையா
நித்திரையும் பயமிழந்த நேசத் தோர்கள்
பேருமிழந்தாணவமு மலங்களற்று
பிலனிடும்பு கோப மனநினைவுமற்று
ஊரிலுறவிழந்து சிவயோகஞ்செய்த
உத்தமரும் பிறப்பரெனவுரைக்கலாமோ. 59

உரைக்க வொண்ணாதென்று நம்மைக்கேட்டபிள்ளா
யுற்ற சிவயோகத்தாருண்மைகேள்நீ
நரைக்கவருமுடல் பாசம் பசுசீவன்றான்
நவில்வர்பதி யானதுவே பரமதென்று
விரைப்பர்மவுனத்தாடி வணங்கிச்சீவன்
மெய்ப்பரமு மெங்கெனவே கேட்கில் மைந்தா
உரைப்பரிதிலோடு கலைசீவனென்று
உற்றபரம்புறம் பெனவுமுரை செய்வாரே. 60

கலையான சீவனீராறு மோடிக்
கழியுமொரு நான்கு கழியாமறகட்டி
நிலையானபரந்தானே வந்தாட்கொள்ளும்
நிலத்தில் வரும் பிறவியொழித் திருப்போமென்பர்
கலையானபரம்வேறு சீவன் வேறு
தான்வேறென்றிருந்த படியாலவர்க்குத்
தொலையாத பிறவியும் வந்தெய்துமென்று
தொல்லுலகிலென்குருவுஞ் சொன்னவாறே. 61

வானிலைமுங்கதிர் மதியினுடம் பிரண்டாய்
வளர்ந்த பிரகாசமிகுவோர்க்கும் வேறாய்க்
காணிலுயிர்பரம் வேறு காணலாகுங்
கருத்தறியாமாந்தர் பிரித்துரைப்பர் கண்டாய்
ஊனிலைமுசீவனுள மறிந்தபோதே
ஒப்பரியவரமதுவாய்க் காணலாகும்
தேனிலைமுமின் பமறிவாருண்டாகிற்
செப்பரிய சீவனிலை யொப்பிடலுமாமே. 62

எறும்புகடையானை முதற்பேதாபேத
மெண்பத்து நான்கு நூறாயிரத்துள்
உறும்பொருளாய் நின்ற சிவனொருவன்றன்னை
யுள்ளுணர்ந்து காண்பதுவே காட்சி நன்றாய்
பெறுமவனைப்புறம் பென்று பேசுமாந்தர்
புறம்புணர்ந்து காண்பதரிதாகுமென்றே
விறுமன்மறை நாலுமுறைத்திடுமவர்க்குள்
மிகுத்தமணம் போற் பரத்தை மெய்யிற்காணே. 63

கேட்டிருந்த புதல்வனெழுந்தடிவணங்கி
கிரியையுடன் சரிதை சிவயோக மூன்றும்
காட்டியுரைத்தனையடியே னறிந்துகொண்டேன்
கருத்தழிந்தேன் முன்புமொரு சேதிகேட்க
நாட்டமுடனினைந்து கொண்டே னென்னுடம்பு
நாதமிராறி லெண்கலை பிரிந்து
சூட்டியுரைத்தனையதற்கு முயிர் தானொங்கே
சொல்லுமறிந்திட்ட விடந்தானுமெங்கே. 64

நினைந்து நம்மைக்கேட்ட மாணாக்கனேகேள்
நின்னுடம்புக்குயிர் நான்கு கலையேயாகும்
முனைந்து மறிந்திடு நாசி நடுவெளிக்குள்
முட்டிநிற்கும்போது சத்தத்தொனியுமுண்டாம்
சினந்து மறித்திலனாகி சத்தமில்லை
சிவுக்கெனவுற்றேழுந்திருப்பதில்லையூடல்
புனைந்துமுறவாடு மனுபோகமில்லை
புசிப்பதற்குவாய்திறப்பதில்லையன்றே. 65

படுக்கவெழுந்திராது பலன்றானுமில்லை
பவனவாய் திறந்து மலஞ்சலம் போக்கில்லை
முடுக்க நகைத்திடலருந்தல் பாட்டுமில்லை
முழுகியெழுந்திருப்பதரிதொருவருக்கும்
கொடுக்கமனம் வராது கொட்டாவியில்லை
குணமுடையாயருங்கலை களாவதுன்னை
அடுத்துமறிந்திடுஞ்செயலையுரைத்திட்டோங்கா
ணறிந்தமகத்துடைய தன்மையுரைசெய்வோமே. 66

பேருரையாருருரையாராண்மை சொல்லார்
பிணங்கறியா ரிணங்கறியார் பெருமைபேசார்
வாருமென்னாரிருமென்னா ரொருவரோடு
மருவியுறவாடிமைந்தர் பெண்டீர் கையில்
சீருபெறாசையுறார் நன்மைதீமை
செய்துபலன் பெறார் பெரிய பிறவியென்னு
மூருபெறார் பிறவியறுத் திருக்குநல்லோ
ருத்தமருமின்னமுண்டுவுரை செய்வோமே. 67

சாதிகுலமரபுரையார்விரத நோன்பு
தனைவிரும்பியுடல் வெறுத்துத்தவங்கள் செய்யார்
நீதிபுராணங்கள் பல நூல்கள் பாரார்
நிட்டை தொழில் முறைமையருந்தீர்த்தமாட்டார்
கோதிமுடியாரசனச் சுகிகள்பண்ணார்
கொடிய தொழில் தனைவிரும்பிப் பணிகள் செய்யார்
வீதிமனத்துடையருலகத் தோடொத்து
விழிதுயில்வர் புளியோடுபழம் போலொத்தே. 68

ஒத்திருப்பாரென்ற குருபரனைப் போற்றி
யுடலுயிரும் பொருளுமெனக் குரைத்து நீரும்
சித்திரமாயருங்கலைகள் மறித்துமுன்நின்ற
செயலெடுத்துக் காட்டியறுதலைமுங்காட்டி
முத்திபெறுந்தலம்பெற்ற பெரியோர்தம்மை
மொழிந்தனையானறிந்தனன்கே ளுலகமீதே
சத்தியுடன் வாழ்ந்து பிறப்பறலாமென்ற
தன்மைதெரிந்திடவுரையு மெனப்பணிந்தான். 69

பேதையுடன் கூடியனு பவித்திருந்தால்
பிறப்பறுமோவென்று நம்மைக் கேட்டபிள்ளாய்
கோதையெனுங் காயப்பெண்தனைச்சுமந்து
கொண்டு நம்பிவந்த பெண்ணைத் தானிழந்தால்
வாதை வருங்காயப் பெண்ணிரவில் வந்து
வலியவுன்னைச் சருவியனுபவிப்பள் கண்டாய்
சூதையறிந் திலைமகனே யறிவுளானே
சொல்தவறாளுடன் கூடிவாழ்தல் நன்றே. 70

ஒன்றுபொருளெனத் தெளிந்துள்ளுலகமீதே
யுண்மையறத் தோடிருந்து வாழ்தல்மெத்த
நன்றுவிதமுரைப்பது கேளனுபவிப்பன்
நடத்திடுவனுண்டு முறங்கிடுவன்றன்னைக்
கண்டு முண்மை யோடுறுதியாகியெல்லாம்
கடவுள் செயலெனத் தெளிந்து கருதினோர்கள்
வென்று பிறவிக்கடலைக் கடந்தெந்நாளு
மெய்ஞ்ஞான வீதி பெற்றுவிளங்குவாரே. 71

விளங்குவாரென்ற குருபரனைப் போற்றி
மெல்லடியில் வீழ்ந்து வாய்புதைத்துநின்று
இளம்பிறை மானரவு புனைந்தானைப் போற்றி
யென்னுடம்பு மெனக்குமறிவித்தாய் போற்றி
உளங்களிகூர்ந் திடவடியேன்ற னக்கு நீயு
முளத்திட்டம் புறத்திட்ட மிரண்டுஞ் சொன்னாய்
களங்கமறக்கண்டு கொண்டேனின்னமொன்று
கருதினேன் பரத்தினடிமுடியேதையா. 72

ஐயர் திருவாய் மலர்ந்தன்புடையோன்றன்னை
யருட்குருவு நோக்கியொரு வசனஞ்சொல்வார்
துய்யபராபரத்தினடி முடி கேட் டெம்மைத்
தொழுது நின்ற பருவலிக நன்றாச்சென்றார்
வையமுழுதுண்டுமிழ்ந்த மாலயன்தான்
வாதுபுரிந்திருவோருந் தேடிக்காணா
மெய்யர் திருவடிமுடிகண்டாருரைப்பார்
வீணுரை செய்தனையறியாவிதமிதென்றார். 73

விதமுரைத்த குருவையடிவணங்கிநின்று
விண்ணப்பமொன்று நீயறியாதுண்டோ
ஜகமுழுதும் படைத்தபரநாத விந்து
செயலறிந்து செப்பினவராருமில்லை
முதல்வ நீயறிந்து பயனுரைத்தாற்போலே
மொழிந்தருள வேண்டுமடி முடிகள் ரெண்டும்
புதல்வனுக்குக் காட்டியருள் புரியுமென்று
பக்தியுடனடி தொழுது போற்றி செய்தான். 74

அடியில் விழுந்தெழுந்து கரங்குவித்துநின்ற
அன்புடையார் பரத்தினடியறு கோணத்துள்
குடியிருக்குமடையாள முக்கோணம் போல்
குமிழியெழுந்தமைவிடமுப்பாழென்பார்
நெடிய வெழுத்திருந்தவிடமதற்கு மேலார்
நிற்குமொருபாதமடையாளங்கேளாய்
படியிளிளங்கதலிகுலைசாய்கின்றாற் போல்
பவளநிறம் போன்றிருக்கும் பருவங்காணே. 75

காணுமறுசுவை யொளித்த தலமுமங்கே
கவிக்கிசைகளெழுந்தவிடந் தானுமங்கே
ஊனிலெழுந்து ரைத்தவிடந்தானுமங்கே
யும்மென்று சொன்ன விடந்தானுமங்கே
தோணுமயிர்ப்பாத நெருப்பாறுமங்கே
சுடரொளியின் றரிசனங்கள் காண்பதங்கே
வேணுமென்ற பாக்கியங்கள் பெறுவதங்கே
மெய்ஞ்ஞான வறிவிருந்தவிடமுமங்கே. 76

நந்திகொலுவிருந்த விடந்தானுமங்கே
நற்கமல மாயிரத்தெட்டி தழுமங்கே
அந்திசந்தி பூசையனுட்டானமங்கே
யலுத்தடைத்த வாசல் சிவயோகமங்கே
மந்திரமுஞ்சாத்திரமும் பிறந்ததங்கே
மனுநீதி குலவரவு தானுமங்கே
செந்தியொளி சிவன்சிங்கா தனமுமங்கே
சிறந்த விருபாதமடையாளமுரைத்தோமே. 77

நற்பவளம் போன்ற விருபாத்தின்மேல்
நாலிரண்டு வங்குலத்தின் மேலதாக
உற்பனமாங் கருவிருந்த மண்டலத்துள்
ளுருகிவெளிகடந்த தனுக்கப்பாலாகி
சிற்பரத்தின் முடியிருக்கு மடையாளங்கேள்
சீறியிடு நாதவிந்தொடுக்கமங்கே
தற்பனங்கள் தத்துவங்களற்றதங்கே
சாதிகுலமரபழிந்த தலமுமங்கே. 78

பாழ்வெளியுஞ்சுடு காடு மானதங்கே
பன்னுமறை சாத்திரங்களொடுக்கமங்கே
கேழ்விமுயலற்ற விடந்தானுமங்கே
கருவமிடுமாங்காரமற்றதங்கே
வாழ்புவியிலுள்ள வுயிரொடுக்க மங்கே
வரையுமெய்ச்சில்தூமை துடக்கற்றதங்கே
சூழ்வெளியிலெழுந்த முடியிருந்த நேர்மை
துலங்கவறிந்திடுவையடையாளஞ் சொன்னோம். 79

பரத்தினடிமுடிபுறம்பாய் நின்றவாறும்
பருவமுனக்கறியவுநான்பகருவேன்கேள்
உரத்தபரத்துடம்புவெளிகாற்றே மூச்சு
வோங்குகடலாடை பொறியூனேயாகும்
விரைக்கமலப்பரமிந்தப் பூமியாகும்
மேற்குமுதுகாகு முகங்கிழக்கேயாகும்
கரக்கமலந்தெற்கு வடக்காகிநிற்குங்
கருத்துடையாய் பரசொருபங்காணுவோர்க்கே. 80

காணவெளிதல்ல விட்ட குறையாராகில்
கலியுகத்தில்குருவன்றிக்கண்டு கொள்வர்
வேணவதிசயங்களவரிடத்திலுண்டாய்
விளங்குமருட் குருவதனால் கண்டுகொள்வர்
ஆணவமுமலஞ்சரிதை கிரியை யோக
மற்றவர் கண்டிருப்பர் இறப்பொழிந்தோர்பாதம்
பேணவல்ல பேரறிந்துகண்டு கொள்வர்
பெரும்புவியிலிவர் திரும்பிப்பிறவார்நெஞ்சே. 81

திணந்துயரத்தழுந்தி மனக்கவலை நீங்கார்
தெளிந்த குருக்கேள்வியில்லாச்சிந்தையாளர்
புணந்தனிற்காய் சருகருந்திப்பால் கொள்வோரும்
பூசனை செய்யாசாரக்கிரியை யோரும்
இணந்தமுவி பாசத்தோடு ழல்கின்றோரும்
இன்புசுகந்தணியாத மோகத்தோரும்
மனந்தெளிந்து கண்டு கொள்ள மாட்டாரென்ற
மாமுனிவர் தாமுரைத்தவாறிதாமே. 82

மெய்க்குருவுத்தரவுதனைக் கேட்டெழுந்தே
  மெல்லடியில் வீழ்ந்துவாய் புதைத்து நின்று
பொய்க்குருவைப் போற்றியடியேனுமிந்தப்
  புவியிலலைப்புண்டு திரியாமல் நீயும்
கைக்குளகப்பட்ட கனிபோற்பரத்தின்
  கமலவடிமுடிவிதுவென்றறிவித்தாயே
மைக்குழல் மாதுமைபாகாஞான தேசி
  வல்லவனே தரிசனாங்கண்டுரைப்பதேதோ. 83

தரிசனாங்கண்டுரைப் பதென்னவென்று கேட்ட
  சேதிமிக நன்று மாணாக்கனேகேள்
உரிசையறிந்தவன்மனமுங்கண்டுகேட்டு
  வுணர்த்தியுருவறிந்தவனோடைந்துபேரும்
வரிசையுடனுணர்த்தியவர் நாதந்தன்னில்
  வந்தொடுங்கும் போதுபன்னிரண்டுமான
பரிசுமொன்றாய்க்கலந்து மொருசோரூபமாகிப்
  பரவிந்துதனிலொடுங்கும் பஞ்சறிவுமற்றே. 84

விந்துபதினாறு விரலங்குலத்தில்
  விரைந்திரவிற்பறிந்தோடி மீளும்போது
முந்தியீராறா முட்புகுந்து நான்கு
  முனைமறிந்துப்பின்றள்ளிப் பாழிற்சேரும்
இந்தவுடற்குள்ளமர்ந்த சீவன்றானு
  மிப்புவியிற்கண்ட தெல்லாங்கண்டு நிற்கும்
வந்துமருவுருப்போலே மயங்கிநிற்கும்
  வடிவுதனையின்னதென்று வகுத்துச்சொல்வோம். 85

ஆறுகடற்குளம் போலுங் கோயில் போலு
மரிவையர்கள் மருவியுறவாடல்போலும்
சீறுமரவங்கள் புலியானை போலுஞ்
சிவிகைபெறுதுரைராணுக்கூட்டம் போலும்
நீறுசிவபூசை தவஞ்செய்வார் போலும்
நிர்வாணப்புருடர் சந்யாசிபோலும்
பூருவஞ்செய்திருந்து தொழிற் செய்கின்றார்போற்
பொருந்தவடிவெடுக்கும் வெளிமயக்கிதாமே. 86

துரத்திமறித்தொருவன் பிடித்திழுக்கின்றாப்போற்
றூக்கியெறிந்திடப் பயந்து போகின்றாப்போல்
அரத்தமனைதனைக்கொளுத்தி வேகின்றாற்போ
லானபல வேஷமெடுத்தாத்துமாவுக்
குரத்தபரங்காட்டியிடு கனவுகண்டு
உறுமியுயிர் வெருவிசயத் தோடுமந்தப்
புரத்திலிருந்திடும்போது காயமிங்கே
பிரக்கினைகெட்டுறங்கு விதம் புகலுவோமே. 87

செத்தசவம் போற்கிடக்கும் வதைழிந்து
சினங்கள் பகை செய் தொழில்கள் தானிழந்து
கற்றகல்விசாத்திரமந்திரமிழந்து
கருதுசிவபூசையுற முறையிழந்து
உற்ற பெண்டீர் பிள்ளைபணங்காசிழந்து
வுடுத்தது கிலாடை நல்லறிவிழந்து
நித்திரை கொண்டிடுமாய சூட்சியான
நித்திரையுற்பனமறியார் நிர்மூடராமே. 88

சுத்தமெனுமாசுசந்தானிழந்து
சூதுடனேகவடுதீவினையிழந்து
சத்தமெனு மாங்காரந் தானிழந்து
தாளாண்மை ஜெயவீரந்தானிழந்து
மெத்தவிசாரப்பட்டு சஞ்சலமிழந்து
விரும்பிநிற்குமாசை முதற்றானிழந்து
நித்திரை கொண்டிடுமாய சூட்சியான
நித்திரையுற்பனமறியார்நின் மூடராமே. 89

மதங்களபிமானமிழந் தாசையற்று
மதிகெட்டுக்கிடந்துறங்கும் போதினுள்ளே
விதங்கள் பெறத்தரிசனங்கள் கனவுகண்டு
விரும்பிநிற்கு முயிருடலையெழுப்பும் போது
இதம்பெறவீரெட்டோடி நாதந்தன்னை
யெழுப்பிவிடும் பனிரெண்டாங் கனவுநீக்கி
உதம்பியெழுந்தெங்கு நிறைந்தீராறாகி
லுடல்செவிவாய்க்கண்மூக்குக்குயிருமாமே. 90

உயிர்ப்புடையான் பஞ்சறிவுமாகிநின்று
உயர்ந்த சிங்காதனத்திருந்து முற்றபோது
எயிர்ப்புடையனிரவுகண்ட கனாக்களெல்லாம்
எண்ணிநினைந் திப்படியான்கண்டதென்று
சகிததுமுடியாம லுரைத்திடுவன் கண்டாய்
தன்மையறிந்தனையொருவன் கற்றவித்தை
பயிர்ப்புவியேழதனை யிரவழித்துநின்று
படைத்திடுவன்தின மிறந்து பிறப்பதாமே. 91

பாங்கானபனிரண்டும் பதினாறுக்கும்
பதியானமுதல் நான்கு தெரிந்தபோது
நீங்காதநித்திரை வந்துற்றவாறி
னிலையறிந்து பயனுரைப்பர் நிலைகாணாத
ஆங்காரகுருவாலுஞ் சீஷராலு
மறியவொண்ணாத தரிசனத்தையறிவித்தோங்காண்
தீங்கானமாந்தரைவிட்டகன்று நீயுஞ்
சிந்தை தெளிந்திருப்பவரோடிணங்குமென்றார். 92

அன்னையிலுமினிய தயவாகியென்மே
லன்புவைத்த குருபரனேயாதிநாதா
உன்மையடிவணங்கியிருகரங்குவித்து
உரையுமெனக் கேட்ட தெல்லாமுரைத்திட்டீரே
என்னையெனத் தெரிந்துலகிற் றெளிந்தபேரோ
டிணங்கியிரு தீங்கானமாந்தருண்டு
தன்னையணுகாதையெனச் சொன்னதேது
சற்குருவேயிருவரையுஞ் சாற்றுமென்றான். 93

சிறுவனுரைதனை விரும்பிக்கேட்டிருந்த
தேசிகுருபரனு மங்கேதுசொல்வார்
சருவவுடலெடுத்ததுமொன்றாவியொன்று
தானொழியவேறில்லை தரணிமீதில்
மறுவறக்கண்டனர் தெளிந்தோர் கவலையற்றோர்
மனதுகண்ணப் பேசியுதா சனங்கள் சொன்னோர்
பெறுநரகு நோவுபிணி வறுமை கொண்டு
பிதற்றிடுவர் தீங்கானமாந்தர்தாமே. 94

'

எவ்வுயிர்க்கு மியங்கியசைகின்ற தொன்று
இரவழித்துப் பகல்படைக்குங் கருத்தினானைச்
செவ்வையொக்கக்கண்டு தெளிந்தோர்கள் தம்மைச்
சினந்தடித்துதிட்டினவர் நப்பினோர்கள்
இவ்வுலகந்தனில் வேங்கைக் கழுதையாகி
யெழுபிறப்பும் பிறந்து நாய்வடிவமாகிக்
கல்வியுருமிக் குலைத்துத் திரிவார்தம்மைக்
கண்டுகொள்ளுந்தீங்கான மாந்தர்தாமே. 95

காட்டியநற் குருவையடிவணங்கிநின்று
காசினியிற் காரணமாய் வந்த கோவே
ஊட்டியுறக்கிடுந்தெய்வ மொருவனென்றே
யுண்மையுரைத்தனையடியேனறிந்து கொண்டேன்
மாட்டில் வருஞ்சடைமுடியீரொருவனாகில்
வையகத்திலரியானென் றுரைப்பதேது
தீட்டிய மெய்ஞ்ஞானகுரு தேசிகாநீ
செப்புகவென்றடி தொழுது பணிந்துநின்றான். 96

வட்டமதியிரவிதனைப்பூசிப்போரு
மண்ணிலிங்கந்தனையெடுத்துப்பூசிப்போரும்
சுட்டவுருமரச்சிலைகள் பூசிப்போருந்
துய்யசெம்பைக் கல்லுருவைப் பூசிப்போரும்
திட்டமுடனெட்டெழுத்துப்பொருளென்போருஞ்
சிறந்த வெழுத்தஞ்சுமே பொருளென் போரும்
விட்ட விடந்தனையறியாரிவர்தாமெல்லாம்
விஷ்ணுவென்றுஞ்சிவனென்றும் விளம்புவாரே. 97

கருவிருந்த தலைமறியார் புரவியொன்று
கால்கள் பனிரெண்டறியார் கருத்தினுள்ளே
அருவியெழுங்குளமறியாரக்குளத்தி
லாயிரத்தெட்டிதழறியார் அவ்வும் உவ்வும்
உருகியடிமுடியாகியஞ் செழுத்து
முணர்த்திநிற்குமாறறியாரொடுங்கும் போது
வெருவியெழுங்கனவொடுக்க மறியாரெல்லாம்
விஷ்ணுவென்றுஞ்சிவனென்றும் விளம்புவாரே. 98

எரிக்கிரைகள் கொடுத்திடும் போதசனந்தன்னை
யெடுத்து நெற்றிதனிற் காட்டிக்கொள்வாரின்பம்
விரித்து மின்னபடியிருக்கு மென்னமாட்டார்
விழுங்கியபோதசனத்தின் சுவைகள்சென்று
தரிக்குமிடந்தனையறியார் வலக்கை யெச்சிற்
றனையகற்றிசந்திபண்ணுங்கைகாணாதார்
அரிக்குமுதலெழுத்தறியாரிவர் தாமெல்லாம்
அரியென்றுஞ்சிவனென்றுமறைகுவாரே. 99

திருமணி நீறணிந்து பலவேடம் பூண்டு
சிவநூலாகமங்கள் பலபலவுங்கற்றுக்
குருவெனவுந்திரிவர் பணவாசையாளர்
குவலயத்திலவர் பிரித்துமுரைப்பர் கண்டாய்
ஒருவனொழிந்தல்லாது வேறுமில்லை
யுடலுயிரும் பொருளுமெனவுவந்துவாழும்
பருவமறியா மனிசிவமென்றோதிப்
பரதவிக்கும் பரத்தினிலையறியார்தாமே. 100

பொன்னுலகத்திந்நூல் கற்றறிந்தபோர்க்குப்
பொறுமைதயவறிவு குணமுண்டாய்மேலும்
தன்னுடம்பைத்தானறிந்துகொள்வர் கேட்டோர்
தயவுபெற்று வாழ்வர் மறுபிறவிதன்னில்
பின்னு நலம் பெறுவர் பொருளாராய்ந்திட்டோர்
பிறப்பறுத்து மெய்ஞ்ஞானத்தலைவராகிப்
பன்னுமறை காணாத பரத்தோடொத்துப்
பதம்பெறுவாரெனக்குருவும் பகர்ந்திட்டாரே. 101


உடலறி விளக்கம்

முற்றிற்று.



என்றும் இறைபணியில் :
A. **பாலா,** B.B.A.,PGDCA., B.L.I.S.,
லவ்லி ஆப்செட்,
வ.உ.சி. தெரு, நாராயணா காம்ப்ளக்ஸ், பண்ருட்டி.
செல் : 9367625848

திருப்பணித்தொண்டர், கும்பாபிஷேக செம்மல்



திருக்கயிலாய பரம்பரை - சைவ ஆதினம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்,

குருமுதல்வர்

அமெரிக்காவில் வெளிவந்த அஞ்சல்தலை



2010-11